அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 14/2021

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 05.08.2026 |
| பெயர் தியாகராஜன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u>:-

1. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதி வாங்கிய பணத்திற்காக என் கைவசம் தாவா சொத்தை கொடுத்துள்ளார் சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தாவா சொத்தில் நான் தான் அனுபவத்தில் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள காவல்நிலையத்தில் கொடுத்த புகாரில் நான் அனுபவத்தில் உள்ளதை சொல்லியுள்ளேன். அந்த புகாருக்கு ரசீது கொடுத்தார்களா என்றால் இல்லை.

2. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 6 CSR ஆவணம் எதற்காக தாக்கல் செய்தேன் என்று காவல்நிலையத்தில் கொடுத்த புகார் சம்மந்தமாக தாக்கல்

செய்துள்ளேன். அந்த புகார் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் அனைத்து ஆவணங்களையும் கொடுத்துவிட்டேன். வா.சா.ஆ 6 ல் உள்ள புகார் படி தாவா சொத்தில் எனது அனுபவம் பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றாலும் நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தது சம்மந்தமாக மட்டும் தான் குறிப்பு உள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்கில் அடமானபத்திரம் ஏற்படுத்தும்போது பிரதிவாதி என்னிடம் கொடுத்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வா.சா.ஆ 2 அடமானபத்திரத்திம் நிறைவேற்றியபோது தாவா சொத்தில் அனுபவத்தை பிரதிவாதி என்னிடம் கொடுத்துவிட்டதாக எந்த குறிப்பும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு உறுதிமொழி பத்திரத்தில் தனியாக எழுதிகொடுத்துள்ளார்.

3. வா.சா.ஆ 4 வழக்கறிஞர் அறிவிப்பு ஆவணத்தில் தாவா சொத்தின் அனுபவம் என் கைவசம் இருப்பதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் எனக்குதெரியாது. என் வழக்கறிஞர் தான் அனுப்பினார். எனது தாவாவில் 2 வது கடன்தொகையான ரூ15 லட்சத்தை பிரதிவாதி என்னிடம் திருப்பி கொடுக்கவில்லை என்றால் தாவா சொத்தின் உரிமையை எனக்கு எழுதிதருவதாக எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் பிரமானவாக்குமூலத்தில் வழக்கறிஞர் என்ன எழுதினார் என்று எனக்கு தெரியாது.

4. வா.சா.ஆ 3 08.03.2009 தேதியிட்ட உறுதிமொழி ஆவணத்தில் ரூ10 லட்சம் கடன் பற்றி மட்டும் தான் குறிப்பு உள்ளது என்றால் சரிதான். அதே ஆவணத்தில் பின்பக்கத்தில் 2 வது கடன்தொகையாக ரூ15 லட்சம் நான் கொடுத்ததாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். 08.03.2009 தேதியில் ஏற்கனவே பிரதிவாதி ரூ10 லட்சம் என்னிடம் செலுத்தாத நிலையில் நான் அன்றைய தேதியில் மீண்டும் ரூ15 லட்சம்

கடன்கொடுத்தேனா என்றால் ஆமாம். கடன் தொகை திருப்பி கொடுக்கவில்லை என்றால் தாவா சொத்தில் உரிமை என்னிடம் சேரும் என்பதால் கொடுத்தேன். 2வது கடன் பெறும்போது பிரதிவாதி கொடுத்த காசோலையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அவ்வாறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் காசோலை எதுவும் இல்லை என்றாலும் வா.சா.ஆ 3 உறுதிமொழி பத்திரத்தை ஆதாரத்திற்காக நான் தான் தயார்செய்தேன் என்றாலும் சரியல்ல.

5. வா.சா.ஆ 2 அடமானபத்திரத்தில் உள்ள பிரதிவாதியின் கையொப்பத்திற்கும் வா.சா.ஆ 3 ல் உள்ள கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிதான் அவரது letter pad ல் எழுதி கையொப்பம் செய்து கொடுத்தார். நான் பிரதிவாதிக்கு ரூ10 லட்சம் மட்டும் தான் கடன்கொடுத்தேன் என்றால் உறுதிமொழி பத்திரத்தில் ரூ15 லட்சம் கொடுத்ததாக நானே தயார்செய்தேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி ரூ10 லட்சம் கடனை வட்டியுடன் திருப்பி கொடுப்பதாக சொல்லி அடமானபத்திரத்தை ரத்து செய்ய சொல்லிகேட்டபோது நான் மறுத்து அதிக வட்டிதொகையுடன் பணத்தை கேட்டதால் பிரதிவாதியால் பணத்தை கொடுக்கமுடியவில்லை என்றால் சரியல்ல. நான் 2வது கடனாக ரூ 15 லட்சம் கொடுத்தேன் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. காசோலை , காசோலை திருப்பப்பட்ட ரசீது மற்றும் வருமானவரி தாக்கல் செய்த ஆவணம் கொடுத்துள்ளேன்.

6. தாவா சொத்தில் என்ன உள்ளது என்றால் 1 பக்கம் வீடு 1 பக்கம் காலி இடம் உள்ளது. தாவா சொத்தில் உள்ள வீட்டில் யார் குடியுள்ளார்கள் என்றால் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினர்கள் உள்ளார்கள். அந்த காலி இடத்தில் பிரதிவாதி மாடுகள் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. நான்

அந்த இடத்தில் சுத்தம் செய்ய முயற்ச்சித்தபோது பிரதிவாதி அவருடைய ஆட்களுடன் சேர்ந்து அதனை தடுத்துவிட்டார். தாவா சொத்து உள்ள வீடு கட்டி எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் தெரியாது. வீட்டுடன் சேர்ந்து தான் அடமானம் கொடுக்கப்பட்டது. நான் கூறுவது போல் வா.சா.ஆ 2 அடமாபத்திரத்தில் வீட்டுடன் சேர்ந்து அடமானம் என்று குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. 56 சென்ட் என்று குறிப்பு உள்ளது. அடமான பத்திரம் தயார்செய்யும்போது குறிப்பிட்டு வீடு, கிணறு ஆகிய விவரங்கள் இருந்தால் சொல்லப்படும் என்றால் பிரதிவாதி அதனை குறிப்பிட மறந்துவிட்டார்.

7. பிரதிவாதி அதனை குறிப்பிட மறந்தால் நான் அதனை குறிப்பிடவேண்டும் என்று சொல்லவில்லையா என்றால் நான் தாவா சொத்தை முதலில் பார்க்கவில்லை. இடம்பற்றி தெரியாமல் தான் அடமாணபத்திரம் ஏற்படுத்தப்பட்டதா என்றால் இடம் உள்ள விவரம் தெரியும் நம்பிக்கையின் பெயரில் ஏற்படுத்தினேன். தாவா சொத்தில் தற்போது யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது காலி இடம் என்னுடைய கட்டுப்பாட்டில் உள்ளது. அதில் பிரச்சனை உள்ளதால் நான் அங்கு எந்த பயன்பாடும் செய்யவில்லை. நான் தாவா சொத்தில் இல்லை என்றாலும் பிரதிவாதியின் கட்டுப்பாட்டில் தான் மொத்த தாவா சொத்தும் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை சுற்றி காம்பவுன்ட் உடன் கேட் உள்ளதா என்றால் உள்ளது. அந்த கேட் பூட்டப்பட்டுள்ளதா என்றால் ஆமாம் . யார் பூட்டியது என்றால் நான் தான் பூட்டினேன் சாவி என்னிடம் தான் உள்ளது.

8. நான் அவ்வாறு கேட்டை பூட்டி சாவி என்னிடம் உள்ளது என்ற விவரத்தை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் கூறுவது போல் கேட் பூட்டப்படவில்லை என்றாலும் பிரதிவாதி தான் தாவா சொத்தில் உள்ளார் என்றாலும் சரியல்ல. பூட்டை உடைத்து பிரதிவாதி

அனுபவத்தில் உள்ளார். 2020 வருடத்திற்கு பிறகு நான் தாவா சொத்திற்குள் செல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியல் இருந்து தற்போது வரை பிரதிவாதி கட்டுப்பாட்டில் தான் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி அரசியல்வாதிகள் அல்லது அடியாட்கள் கொண்டு தாவா சொத்தில் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்பதால் தான் நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்து அதன் ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. தாவாவில் நான் சொத்தின் அனுபவத்தில் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றாலும் அது பொய்யான விவரம் என்றாலும் சரியல்ல. பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.